# சோட்டா பீமுடன்

சுகாதாரம்

புத்தகம் 1



# கிருமி மந்திரவாதியின் எழுச்சி

# சோட்டா பீமுடன்

## சுகாதாரம்

இந்த கதை புத்தகம் நாடக அடிப்படையிலான பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக எழுதப்பட்டது. இது இந்தியா முழுவதும் உள்ள குழந்தைகளுக்கு சுத்தம் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது

நீங்கள் இந்த பாடத்திட்டத்தை பார்த்து பதிவிறக்கம் செய்ய https://elab.emerson.edu/hygiene/


உருவாக்கியவர்கள்

ENGAGEMENT LAB

கூட்டமைப்பாளர்கள்

GREEN GOLD Animation Pvt Ltd

MARY ANNE CHARITY TRUST MACT

ஆதரவு அளித்தவர்கள்

UBS

UBS Optimus Foundation



ஒரு நாள் 'அசுத்த மந்திரவாதி', மனிதர்கள் மலம் கழிக்கும் திறந்தவெளியில் நின்று கொண்டு கிருமிகளை எல்லா இடங்களுக்கும் பரப்பிக்கொண்டிருக்கிறான். அவன் செய்யும் நாசவேலையை தடுக்க,

'தூய்மை மந்திரவாதி' அங்கு பறந்து வந்து அவருடைய மந்திரக்கோலை அசுத்த மந்திரவாதியை நோக்கி காட்டி அவனை அழிக்க முனைகிறார்,

ஆனால் திறந்தவெளியில் கிடக்கும் மலங்களிருந்து வரும் கெட்ட கிருமிகளால், அசுத்த மந்திரவாதிக்கு நிறைய சக்தி கிடைப்பதால், அந்த இடத்தில் தூய்மை மந்திரவாதியின் மந்திரக்கோல் சக்தியை இழந்துவிடுகிறது.



அசுத்த மந்திரவாதி  தன்னுடைய மந்திரக்கோலால் தூய்மை மந்திரவாதியை தாக்க அங்கு அசுத்தமான குமிழ்கள் நிறைய உருவாகிறது. அதனால்

தூய்மை மந்திரவாதி சுத்தமான குமிழ்கள் சிலவற்றை உருவாக்கி அதனுள் தூய்மை பாடலை புகுத்தி சுத்தமான குமிழ்கள் வழியாக ஊர்மக்களிடம் உதவி கேட்டு தூது அனுப்புகிறார்.

அதற்குள் அசுத்த மந்திரவாதி அனுப்பிய அசுத்த குமிழ் ஒன்றில் தூய்மை மந்திரவாதி வசமாக மாட்டிக்கொள்கிறார்.



தூய்மை மந்திரவாதி அனுப்பிய நல்ல குமிழ்களில் ஒன்று பறந்து வந்து, மைதானத்தில் ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும் சோட்டா பீம் மற்றும் அவன் நண்பர்கள் சுக்கி , டோலு போலு, ராஜூ, ஜக்கு, காளியாவின் முன்னால் போய் வெடிக்கிறது. அந்த சத்தத்தினால் அவர்கள் எல்லோரும் விழித்துக்கொள்கின்றனர்.

அப்போது, ரம்யமான இசையில் ஒரு பெண் பாடும் பாடல் அந்த இடத்தில் ஒலிக்கிறது.

அவர்கள் எல்லோரும் அந்த பாடல் வரும் திசையை நோக்கி செல்ல, அது அவர்களை அந்த மலைத்தொடரின் பள்ளத்தாக்கு வழியாக ஓடும் நதியின் அருகே அழைத்துச்செல்கிறது



எல்லோரும் தண்ணீருக்குள் எட்டிப்பார்க்க, ஆற்று நீருக்குள் நீச்சல் அடிக்கும் ஒரு சோப்புக்கட்டி அவர்கள் கண்ணுக்கு புலப்படுகிறது. அவர்களில் டோலுவும் போலுவும் மட்டும் அந்த சோப்புக்கட்டியை தொட்டுப்பார்க்க, அப்போது ஆற்று நீரில் சாடாரெனத் தோன்றிய சுழல் ஒன்று அவர்கள் இருவரின் கையைபிடித்துக்கொண்டு சுத்தமாக கையை கழுவும் முறையை அவர்களுக்கு செய்துகாட்ட வைத்து, மற்றவர்களையும் அதே முறையில் சுத்தமாக கையை கழுவச்சொல்கிறது.



எல்லா சிறுவர்களும்  ஆற்றுநீரில் கைகளை கழுவி சிரித்து மகிழும் போது தூய்மை மந்திரவாதி அசுத்த குமிழிருந்து விடுபட்டு அவர்கள் முன்னால் தோன்றி, ”அசுத்த மந்திரவாதியை அழிக்க நீங்கள் எனக்கு உதவ வேண்டும் எனவும் அதற்கு, நீங்கள் எல்லோரும் தூய்மை மந்திரங்களை கற்றுக்கொள்ள வேண்டும்” என சொல்லி, முதல் கட்டமாக ”கழிவறை மந்திரத்தை” யும் பின்னர் சோப்பு போட்டு கைகழுவும் ”தூய்மை மந்திரத்தை” யும் ஒரு பாடலாக அவர்களுக்கு கற்றுக்கொடுக்கிறார்.



## கழிவறை மந்திரம்:

தண்ணியை எடுப்போம்
டாய்லெட்டில் ஊற்றுவோம்
டாய்லெட் போவோம்
மீண்டும் ஊற்றுவோம்
கைகளை கழுவுவோம் !



பிறகு சோப்பு போட்டு கழுவும் தூய்மை மந்திரத்தையும் ஒரு பாடலாக சொல்லிக்கொடுக்கிறார்.

தண்ணியும் சோப்பும்
முன்னும் பின்னும்
தண்ணியும் சோப்பும்
விரல்களும் கட்டைவிரலும்
தண்ணியும் சோப்பும்

இடுக்கிலும் நகமும்
தண்ணியும் சோப்பும்
சுத்தமாய் இருப்போம்
சுகாதாரமாய் இருப்போம்

தூய்மை மந்திரவாதி மக்கள் பயன் படுத்தியது போக மீதமுள்ள மந்திர சோப்பை எடுத்துக்கொண்டு அசுத்த மந்திரவாதியை அழிக்கச் செல்கிறார்.


DHOLAKPUR

திறந்தவெளியில் மலம் கழித்து விட்டு ஒரே திசையில் நடை பிணத்தைப்போல நடந்து செல்லும் கிராமத்து மக்களை, தோலக்பூருக்கு திரும்பும் சோட்டா பீமும், அவனது நண்பர்களும் அவர்களை பின்தொடர்ந்து செல்கின்றனர். உண்மையாக அவர்கள் எல்லோரும் சுய நினைவே இல்லாமல் இருப்பதை பார்த்து திகைத்து நிற்கும் வேளையில்



அந்த திறந்த வெளியில் அழுக்கான கைகளுடன் நிற்கும் அசுத்த மந்திரவாதி அவர்களோடு வரும் ”டோலுவையும் போலுவையும்” தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து அவர்களின் சக்தியை எடுத்துக்கொள்ள அசுத்த மந்திரவாதியின் பலம் மேலும் மேலும் அதிகரிக்க ஆரம்பிக்கிறது.



இதனால் பீமும் நண்பர்களும் அங்கு கழிவறை மந்திரத்தை பாடுகிறார்கள்.

கழிவறை மந்திரம்:

தண்ணியை எடுப்போம்
டாய்லெட்டில் ஊற்றுவோம்
டாய்லெட் போவோம்
மீண்டும் ஊற்றுவோம்
கைகளை கழுவுவோம் !



சிறுவர்கள் கழிவறை மந்திரத்தைப் பாடியதும் கிராம மக்கள் ஒவ்வொருவராக சுய நினைவை பெறுகிறார்கள். கூடவே டோலுவும் போலுவும் சுய நினைவைப் பெற்று எழுந்து கழிவறையை நோக்கி ஓடுகின்றனர்.



ஆனால் இன்னும் நிறைய பேர் அசுத்த மந்திரவாதியின் கட்டுப்பாட்டால் சுய நினைவு இல்லாமல் இருந்தனர்.

பீம் தான் கொண்டுவந்த மந்திர சோப்பு கட்டியை கொடுக்க அனைவரும் சோப்பு போட்டு கைகழுவிய படி கைகழுவும் மந்திரபாடலை பாடத்தொடங்கினர்.


FLOWERS

அனைவரும் சுற்றி நின்று கொண்டு கையை கழுவிய படி கைகழுவும் மந்திரத்தை பாடுகின்றனர்.

கைகழுவும் மந்திரம்:

தண்ணியும் சோப்பும்
முன்னும் பின்னும்
தண்ணியும் சோப்பும்
விரல்களும் கட்டைவிரலும்
தண்ணியும் சோப்பும்

இடுக்கிலும் நகமும்
தண்ணியும் சோப்பும்
சுத்தமாய் இருப்போம்
சுகாதாரமாய் இருப்போம்


SHOP

அந்த இடத்தில் சட்டென்று நூற்றுக்கணக்கான குமிழ்கள் சோப்புக்கட்டியிலிருந்து புறப்பட்டு அசுத்த மந்திரவாதியின் கட்டுபாட்டில் இருக்கும் மக்களை விடுவிக்கின்றன. மேலும் குமிழ்கள் எல்லாம் அசுத்த மந்திரவாதியை சூழ்ந்து கொண்டதால் அசுத்த கிருமிகளின் சக்தி குறைந்ததால் பலம் இழந்து  கீழே விழுகிறான்.


VEGETABLE
SHOP

அசுத்த மந்திரவாதியின் கை சுத்தமானதால் அவனது மந்திரக்கோல் கீழே விழுகிறது, சோட்டா பீம் அவன் மந்திரக்கோலை எடுத்து ஓங்கி அவன் தலையில் அடிக்கிறான்


VEGETABLE
JUICE SHOP

அசுத்த மந்திர வாதியின் பிடியிலிருந்து தூய்மை மந்திரவாதி விடுதலையானவுடன் அசுத்த மந்திரவாதையை எல்லோரும் சேர்ந்து விரட்டி அடித்து விடுகிறார்கள்.

அசுத்த மந்திரவாதி திரும்ப வராம இருக்கனும்னா எல்லோரும் சரியான முறையில் கழிவறையை பயன்படுத்தி, சுத்தமான முறையில கையை கழுவி முழு சுகாதாரத்தோட இருக்க வேண்டும் என தூய்மை மந்திரவாதி வேண்டுகோள் விடுக்கிறார். மேலும் பீம் சுக்கி மற்றும் நண்பர்களிடம் அசுத்த மந்திரவாதி திரும்பவும் வந்தால் நீங்கள் என்னிடம் கற்றுக்கொண்ட மந்திரங்களைப் பயன்படுத்தி தன்னை அழைக்கவேண்டும் என அறிவுரை வழங்கி தூய்மை மந்திரவாதி தூய்மையான காற்றோடு கலந்து மறைந்து போகிறார்.